சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No.OS.246/2022**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரைசாமி | தொழில் | மேஸ்திரி |
| தந்தை பெயர் | கண்ண கவுண்டர் | ஜாதி | |
| கிராமம் | ரெட்டிபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 58 |

**12.09.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 26.02.2019 தேதியிட்ட பிரதிவாதியின் மகன் சிவா என்பவரின் இறப்பு சான்று சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிவாவின் வாரிசு சான்று சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிவாவின் ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் செய்யப்பட்டு) **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிவா பெயரில் உள்ள ஆர்.சி புத்தகம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எம்.சி.ஓ.பி. 154/2019 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.